கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் **266/2019**

வாதி தரப்பு சாட்சி –1 சண்முகவள்ளி திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 05.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ 6 மருத்துவ இரசீதுகள் 2016 ல் நாகராஜன் சிசிச்சை பெற்றதற்தற்கான மருத்துவ இரசீதுகள் என்றால் சரிதான். எந்த மருத்துவமனை சிசிச்சை பெற்றார் என்றால் கரூர் அப்பலோ மருத்துவமனையில் சிசிக்சை பெற்றார். எதற்காக சிகிச்சை பெற்றார் என்றால் கீழே விழுந்து கால் உடைந்ததால் சிகிச்சை பெற்றார். வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையான மருத்துவ இரசீதுகளில் எனது கையெழுத்தோ, நாகராஜனின் கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். நாகராஜன் 2018 ல் இறந்த பிறகு கடவூர் அரண்மனையில் அவர் தங்கியிருந்த அறையிலிருந்து எடுத்து வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்வசம் தான் சிசிச்சை இரசீதுகள் இருந்தன. வா.சா.ஆ. 11 குடும்ப அட்டையில் நாகராஜனின் புகைப்படம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.12 எனது மகனின் பள்ளி மதிப்பெண் சான்றிதழில் எனது மகனின் கையொப்பம் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் வேறு யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் சரியல்ல. எனது கையொப்பமும் உள்ளது. வா.சா.ஆ.12 ல் எனது கையெழுத்து இல்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**